தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோத்தகிரியில் இன்றும், நாளையும் காய்கறி கண்காட்சி



கோத்தகிரியில் உள்ள நேரு பூங்காவில் சனி, ஞாயிறு (மே 3, 4) ஆகிய இரு நாள்கள் கோடைவிழா மற்றும் காய்கறி காண்காட்சி நடைபெறவுள்ளது.

கோத்தகிரியில் தோட்டக்கலைத் துறையின் மூலமாக ஆண்டுதோறும் கோடைவிழா மற்றும் காய்கறி கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 7 ஆவது காய்கறி கண்காட்சி, மே 3, 4 ஆம் தேதிகளில் கோத்தகிரி நேரு பூங்காவில் நடைபெறவுள்ளது. கோடைவிழா மற்றும் காய்கறி கண்காட்சி தொடக்க விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமை வகிக்கிறார். டாக்டர் ரா.கண்ணன் தொடங்கி வைக்கிறார்.

வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்யபிரதா சாகு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் த.செந்தில்குமார், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் ஸ்ரீநிவாச ரெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

இக்கண்காட்சியில் காய்கறிகளால் ஆன அலங்கார வடிவங்கள், அலங்கார வளைவுகள், ரங்கோலிகள், பல்வேறு உருவ வேலைப்பாடுகள் அமைக்கப்படும். தோட்டக்கலைத் துறையின் சார்பாக அரியலூர், திண்டுக்கல், நீலகிரி, ஈரோடு, பெரம்பலூர், சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சி, வேலூர், விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களிலிருந்து காய்கறிகளால் பல்வேறு உருவ வேலைப்பாடுகள் கொண்ட காய்கறி அரங்குகள் அமைக்கப்படும்.

நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறையின் சார்பில் காய்கறி அலங்கார வடிவங்கள், 500 கிலோ அளவிலான காலிஃப்ளவர் கொண்டு இரண்டு மொட்டு காளான் உருவம் ஆகியவை கண்ணைக் கவரும் விதமாக அமைக்கப்படவுள்ளது.

வீட்டு காய்கறி தோட்டத்தை சிறந்த முறையில் அமைப்பவர்களுக்கு பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்கப்படவுள்ளன. இதுபோக காய்கறி கண்காட்சியில் சிறந்த அரங்குகள் அமைத்து போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

### வைகை அணையில் 3 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர்

வைகை அணையிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு 3 நாள்களுக்கு மட்டுமே குடிதண்ணீர் கிடைக்கும் நிலை இருப்பதால், கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

பெரியாறு, வைகை அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், அணைகளுக்கு தண்ணீர் வரத்து வெகுவாக

குறைந்தது. முந்தைய ஆண்டுகளைவிட தற்போது, அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென குறைந்து வருகிறது. மூல வைகை உள்ளிட்ட வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை பொய்த்ததாலும், பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படாததாலும், தண்ணீர் வரத்து இல்லாமல் வைகை அணை வறண்டு வருகிறது. இந்த அணையை நம்பியுள்ள விவசாயம் மற்றும் குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, வைகை அணையை நம்பியே மதுரை மாநகராட்சியின் பெரும் பகுதி மக்களின் குடிநீர் ஆதாரம் உள்ளது. அணையிலிருந்து ஆணடுதோறும் மதுரை மாநகராட்சிக்கு அரசால் 1,500 மில்லியன் கன அடி தண்ணீர் ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது. இத் தண்ணீரை தினமும் சுமார் 9 மில்லியன் கன அடி அளவு தண்ணீரை மாநகராட்சி பெற்று, 2 வைகை குடிநீர் திட்டங்கள் மூலம் ஆண்டிபட்டி அருகிலுள்ள பண்ணைப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில், சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகர மக்களுக்கு குடிநீர் விநியோகித்து வருகிறது.

அணை வறண்டு வருவதால், மாநகரில் 3 மாதங்களுக்கு மேலாக 5 நாள்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் முந்தைய 72 வார்டுகளில் (மொத்தம் 100 வார்டுகள்) மட்டும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி, பெரியாறு அணையின் நீர்மட்டம் 109.70 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 274 கனஅடி தண்ணீர் வரத்தும், குடிநீர் திட்டங்களுக்காக 100 கன அடி தண்ணீர் வெளியேற்றமும் செய்யப்படுகிறது. இரண்டு நாள்களாக தண்ணீர் வரத்து அதிகரித்திருப்பதால், பெரியாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. அணையில் 864 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது.

வைகை அணையின் நீர்மட்டம் 21.92 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து இல்லாத நிலையில், மதுரை, ஆண்டிபட்டி கூட்டுக் குடிநீர் திட்டங்கள் உள்ளிட்ட குடிநீர்த் திட்டங்களுக்காக 40 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் இருப்பு 136 மில்லியன் கன அடியாக இருந்தபோதிலும், இன்னும் 34 மில்லியன் கன அடி தண்ணீரை மட்டுமே வைகை அணையிலிருந்து எடுக்க முடியும். 103 மில்லியன் கன அடி, அதாவது 20 அடிக்கு கீழுள்ள தண்ணீரை அணையிலிருந்து எடுக்க இயலாது.

மழையில்லாமல் இதே நிலை நீடித்தால், அணையிலிருந்து இன்னும் 3 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் எடுக்க முடியும். மேலும், மாநகரப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டமும் 500 முதல் 1,000 அடிக்கு கீழே சென்று விட்டதால், கடும் தண்ணீர் தட்டுப்பாடு அபாயம் மதுரை மாநகர மக்களைத் தொற்றிக் கொண்டுள்ளது.

வறட்சியைச் சமாளிக்க அரசு ஒதுக்கீடு செய்துள்ள சிறப்பு நிதி மூலம் வார்டுகள் தோறும் நீராதாரம் உள்ள இடங்களில் சுமார் 411 ஆழ்துளை குழாய்களை மாநகராட்சி அமைத்துள்ளது. லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளால் மட்டும், போதிய தண்ணீர் கிடைக்க வாய்ப்பில்லாத சூழல் இருக்கிறது.

பல லட்சம் மக்கள் திரளக் கூடிய சித்திரை திருவிழாவும் துவங்கியுள்ள நிலையில், வறட்சி தலைதூக்கியிருப்பது, அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### நத்தத்தில் கேரட் விலை உயர்வு

நத்தத்தில் உள்ள தினச் சந்தைக்கு, மலைப் பகுதிகளான கொடைக்கானல், ஊட்டி உள்ளிட்ட இடங்களில் இருந்து கேரட் விற்பனைக்கு வருகிறது. ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் கேரட் சீசனாகும். பிப்ரவரி முதல் வாரத்தில் கிலோ ரூ. 25-க்கு விற்பனை செய்யப்பட்ட கேரட், பிப்ரவரி இரண்டாவது

வாரத்தில் வரத்து குறைவால் கிலோவுக்கு ரூ. 5 வரை அதிகரித்து ரூ. 30-க்கு விற்கப்பட்டது.

இந்நிலையில், வெயில் காலம் துவங்கி கேரட் விளைச்சல் குறைந்துள்ளதால், அதன் விலை தொடர்ந்து ரூ. 5 வரை உயர்ந்தே இருக்கிறது.

இது குறித்து, வியாபாரி முத்துமாணிக்கம் கூறியது: டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய குளிர்கால மாதங்கள் மட்டுமே கேரட் சீசனாகும். இம்மாதங்களில் கேரட் விளைச்சல் அதிகமாக இருக்கும். சீசன் முடிவடைந்ததில் இருந்து கேரட் விலை அதிகரித்து வருகிறது. தற்போது, ஒரு கிலோ கேரட் ரூ. 40 வரை விற்பனை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் கேரட் வாங்குவதை தவிர்க்கின்றனர் என்றார்.

### மானாமதுரையில் மக்களை மகிழ்வித்த மழை

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் நீண்ட நாள்களுக்குப் பிறகு மழை பெய்து மக்களை மகிழ்சியடையச் செய்தது. மானாமதுரை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த பல நாள்களாக வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது.

இந் நிலையில் மானாமதுரை பகுதியில் கடந்த சில நாள்களாக அவ்வப்போது சாரல் மழை இருந்தது. மக்களுக்கு இந்தச் சூழல் இதமாக அமைந்தது. மானாமதுரை பகுதியில் வெள்ளிக்கிழமை பிற்பகல் பலத்த இடியுடன் மழை பெய்யத் தொடங்கியது. சுமார் முக்கால் மணி நேரம் விடாமல் பெய்த மழையால் நகரில் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்தது. நீண்டநாள்களுக்குப் பிறகு பெய்த இந்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தோட்டப்பயிர் விவசாயத்துக்கு இந்த மழை பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.37 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 42.37 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 606 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது.

வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர்

திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.8 டி.எம்.சி.

### பல்லடம் கறிக்கோழி விலையில் மாற்றமில்லை

பல்லடம் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

வியாழக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.75 ஆக இருந்தது.

விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால், வெள்ளிக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

### வறட்சியிலிருந்து கரும்பைக் காப்பாற்றும் வழிமுறைகள்

கரும்புப் பயிருக்கு வறட்சி மேலாண்மை முறைகள் குறித்து ஆரணியை அடுத்த சேவூர், சிறுமூர், அக்ராபாளையம் கிராமங்களில் செயல்விளக்க வயல் விழா அண்மையில் நடைபெற்றது.

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆரணி பகுதி கரும்புத் தோட்டங்கள் வறட்சியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் கா.ஜெயம் உத்தரவின்பேரில் கரும்பு அபிவிருத்தி அலுவலர் வி.ஆர்.விவேகானந்தன் ஆலோசனையின்படி சேவூர், சிறுமூர்,

அக்ராபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் போர்க்கால அடிப்படையில் வறட்சியில் இருந்து காப்பாற்ற செயல்விளக்க வயல் விழா நடத்தப்பட்டது.

இதில் சேவூர் கோட்ட கரும்பு அலுவலர் மு.வேலாயுதம் பேசியது: இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலவுகிறது.

இத்தருணத்தில் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு கரும்பு பயிரில் ஒரு ஏக்கருக்கு 2.5 சதவீதம் பொட்டாஷ் கரைசலை தெளிக்க வேண்டும். அதாவது 2 முதல் 3 மாத வயதுடைய பயிருக்கு 2.5 கிலோ யூரியாவுடன் 2.5 கிலோ பொட்டாஷ் உரத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் இலைகள் மீது கரும்பு தோகை நன்கு நனையும்படி மாலை நேரத்தில் தெளிப்பதன் மூலம் பயிர் ஒரு மாதம் வரை காயாமல் பசுமையுடன் காணப்படும். மேலும் இம்முறையை 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும் என்று கூறி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

மேலும் 5 முதல் 6 மாத வயதுடைய கரும்பு தோட்டங்களில் சோகை உரித்து அந்த காய்ந்த சோகையை பார்களின் மீது அப்படியே பரப்புவதன் மூலம் மண்ணின் ஈரப்பதம் பாதுகாத்து கரும்பு பயிரை வறட்சியிலிருந்து காப்பாற்றலாம் என்றும் தெரிவித்தனர்.

ஏற்பாடுகளை கரும்பு உதவியாளர் பி.ராஜமன்னார், களப்பணியாளர்கள் எம்.மதியழகன், சி.கிருஷ்ணமூர்த்தி. தனபால், ஆனந்தன், இ.கலையரசன், சி.மனோகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

### வெப்ப அளவுகள் அதிகரிப்பதால் கோழி முட்டை உற்பத்தி குறையும்

வெப்ப அளவுகள் தொடர்ந்து அதிகளவில் நீடிப்பதால் கோழிகளிடையே முட்டை உற்பத்தியும், எடையும் குறைவாக இருக்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களில் (மே 3 முதல் 6ஆம் தேதி வரை) வானம் பொதுவாக, லேசான மேகமூட்டத்துடனும் காணப்படும். தவிர, சனிக்கிழமை, திங்கள்கிழமை சில இடங்களில் 3 மிமீ வரையும், செவ்வாய்க்கிழமை 2 மிமீ வரையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 6 கிமீ முதல் 8 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 78.8 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 102.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 22 சதம் முதல் அதிகபட்சம் 70 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு

வெப்ப அளவுகள் அதிகரித்து இருப்பதால், கோழிகளிடையே தீவன எடுப்பு மிகவும் குறைந்து காணப்படும். இதனால், முட்டை உற்பத்தியும், எடையும் குறைவாக இருக்கும். உற்பத்தியைப் பெருக்கவும், கோழிகளின் தீவன எடுப்பை அதிகரிக்கச் செய்யவும் இரவு நேரத்தில் தீவனமிடுதல், தீவனத்தில் புரதத்தைக் குறைத்து அமினோ அமிலங்கள் சேர்த்தும், சோர்வு நீக்க மருந்துகளான எலக்ட்ரோலைட்ஸ், வைட்டமின் சி போன்றவற்றை சேர்த்தும் வர வேண்டும். தண்ணீரில் வெப்பம் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி, மேல்மூச்சுக்குழல் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோடைகால பராமரிப்பு முறைகளைத் தவறாமல் கடைப்பிடிப்பதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றிட வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு

தீவனப் பயிர் கம்பு, நேப்பியர் ஒட்டு புல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வறட்சி காலத்தில் சொட்டுநீர்ப் பாசனம் மூலம் ஒரு தூருக்கு ஒரு லிட்டர்

என்ற அளவில் சொட்டுநீர்ப் பாசனம் செய்து பசுந்தீவனத்தை அறுவடை செய்யலாம். தீவனத்தை அறுவடை செய்யும் போது தரையுடன் ஒட்டி (5செமீ அளவுக்கு) செய்வதால் அதிக தூர்களுடன் அதிகளவு பசுந்தீவனத்தைப் பெற முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சேலம் மாவட்டத்தில் சூறாவளிக் காற்றுடன் மழை

சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை பலத்த சூறாவளிக் காற்று வீசியது. சில இடங்களில் குறைவான அளவில் மழை பெய்தது. சூறாவளிக் காற்று காரணமாக வேம்படிதாளம் பகுதியில் பல இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்தன.

சேலம் மாநகரம், மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகக் கடுமையான கோடை வெயில் நிலவி வருகிறது. மிக அதிகபட்சமாக 106 டிகிரி வரையிலும் வெயில் பதிவாகி உள்ள நிலையில், தினசரி 100 டிகிரிக்கும் அதிகமான கோடை வெப்பம் மக்களை வாட்டி வதைத்து வருகிறது.

கோடை காலம் தொடங்கிய நிலையில், சில நாள்களுக்கு முன்பு கோடை மழை சிறிது நேரம் பெய்து மக்களைக் குளிர வைத்தது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை முதலே கோடை வெயில் கொளுத்தி வந்த நிலையில், மாலை 4 மணியளவில் சேலம் மாநகரில் கரிய மேகங்கள் திரண்டன.

சிறிது நேரத்தில் குளிர் காற்றுடன் சுமார் 20 நிமிஷங்கள் மழை பெய்தது. பல இடங்களில் சாலைகளில் தண்ணீர் வடிந்து ஓடும் அளவுக்கு மழை பெய்தது. இதனால், வெயிலால் ஏற்பட்ட சூடு தணிந்து இதமான காற்று வீசியது. இதைப் போலவே, மாவட்டத்தின் பல இடங்களில் பலத்த சூறாவளிக் காற்றுடன் சிறிது மழைத் தூறல் காணப்பட்டது.

சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி, வீரபாண்டி, ஆட்டையாம்பட்டி, சீரகாபாடி, வேம்படிதாளம் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்று வீசியது. இதனால், பல இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்தன. சில இடங்களில் மரக் கிளைகள் முறிந்தன. வேம்படிதாளம் அருகேயுள்ள திருவளிப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் இருந்த வேம்பு, புங்கன் உள்ளிட்ட 5 மரங்கள் வேருடன் சாய்ந்தன.

இதனால், பள்ளியின் சுற்றுச்சுவர் சேதமடைந்தது. பள்ளிக்கு விடுமுறை என்பதால் யாருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை. மேலும், மின் கம்பங்களின் மீது மரங்கள் விழுந்ததால் அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதைப் போலவே காகாபாளையம் - வேம்படிதாளம் சாலையில் ரயில்வே மேம்பாலம் அருகில் சாலையில் மரம் விழுந்ததால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சங்ககிரியில் ...

சங்ககிரியில் வெள்ளிக்கிழமை காலை முதலே கோடை வெப்பம் அதிக அளவில் இருந்தது. இதையடுத்து, மாலை 4 மணிக்கு பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்தது. சங்ககிரி பழைய பேருந்து நிலைய பகுதியில் நிழல்குடை இல்லாததால் பயணிகள் சிரமம் அடைந்தனர். பலத்த காற்று வீசியதில் மரக் கிளைகள் முறிந்து விழுந்தன.

### குமரி மாவட்டத்தில் தொடரும் மழை

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கோடை மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மாம்பழத்துறையாறில் 71 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

மேலும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பதிவாகி உள்ள மழை அளவு:

நாகர்கோவில் - 8.8 மி.மீ., சுருளோடு- 5 மி.மீ., ஆரல்வாய்மொழி- 2.6 மி.மீ., மயிலாடி 2.8 மி.மீ., ஆணைக்கிடங்கு - 70 மி.மீ., குளச்சல்- 7.2 மி.மீ., அடையாமடை- 21 மி.மீ., முள்ளங்கினாவிளை- 3 மி.மீ., பேச்சிப்பாறை - 1.4 மி.மீ., பெருஞ்சாணி- 15.4 மி.மீ. மழை காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 144 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 36 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மழை பெய்தது. நாகர்கோவில், சுசீந்திரம், நல்லூர், மருங்கூர், குலசேகரன்புதூர், தோவாளை உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது. நாகர்கோவில் நகரில் பெய்த மழையால் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டது. அண்ணா பஸ் நிலையத்தில் மழைநீர் தேங்கியதால் பயணிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாயினர்.

### காற்றின் வேகம் குறைவால் மீன்கள், நண்டுகள் வரத்து குறைவு

விளாத்திகுளம் அருகே வேம்பாரில் சராசரியை விட குறைந்த அளவிலே மீன்கள் மற்றும் நண்டுகள் வரத்து இருப்பதாலும், ஒன்றிரண்டு வகைப்பட்ட மீன்களே கிடைப்பதாலும் நாட்டுப்படகு மீனவர்கள் தொழிலில் பாதிப்பும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர். மீன் வரத்து குறைவின் எதிரொலியால் ஏலம் விடும் கடற்கரை பகுதி களையிழந்து வெறிச்சோடி காட்சியளிக்கிறது.

மீன் இனங்களைப் பாதுகாக்கவும் அதன் இனப்பெருக்கத்துக்காகவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15ஆம் தேதிமுதல் மே 30ஆம் தேதி வரை 45 நாள்கள் விசைப்படகுகளில் கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு அரசு தடை விதிக்கிறது. இந்தக் காலகட்டங்களில் நாட்டுப்படகு மற்றும் கட்டுமரங்களில் சென்று மீனவர்கள் மீன் பிடிக்கின்றனர்.

வேம்பார் பகுதியில் ஏராளமான நாட்டுப்படகுகள் உள்ளன. வேம்பார் மீனவர்கள் கரைவலை, ஓலைவலை, வீச்சுவலை, தூண்டில் ஆகியவற்றைக் கொண்டு நாட்டுப்படகில் சென்று மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

நண்டுகளைப் பிடிக்கும்போது முதல்நாள் கடலுக்குள் வலை விரித்துவிட்டு மறுநாள் சென்று நண்டுகளை பிடித்து வருகின்றனர்.

தற்போது வேம்பார் கடல் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக காற்றின் வேகம் குறைந்து காணப்படுவதால், நள்ளிரவு ஒரு மணியளவில் கடலுக்குச் சென்றுவிட்டு காலை 7 மணியளவில் கரைக்கு திரும்பும்போது, மிகக் குறைந்த அளவில் ஒன்றிரண்டு வகைப்பட்ட மீன்களும், குறைவான அளவில் மீன்பாடும் கிடைப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து வேம்பார் நாட்டுப்படகு மீனவர் பிரிட்டோ அருள்சீலன் கூறுகையில், வேம்பார் கடல்பகுதியில் பதினைந்துக்கும் மேற்பட்ட மீன் வகைகள் வழக்கமாக கிடைக்கும். தற்போது கடல்பகுதியில் காற்றின் வேகம் குறைந்து காணப்படுவதால் மீன் வரத்து பாதித்துள்ளது.

தேவைக்கும் குறைவாக மீன்பாடு உள்ளதால் உள்ளூர் சந்தையில்கூட மீன் விலை அதிகரித்துள்ளது. வேம்பாரில் விளை மீன் ஒரு கிலோ 200 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரை விற்பனையாகிறது. நண்டு வகைகளில் நீலக்கால் நண்டு, ஓலைக்கால் நண்டு, சிப்பி நண்டு, பொட்டு நண்டு வகைகள் கிலோ 100 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை விற்பனையாகின்றன. வீதிகளில் கொண்டு சென்று விற்பனை செய்யும் உள்ளூர் சிறிய வியாபாரிகள் மற்றும் உணவகங்கள் வைத்திருப்போர் மட்டுமே போட்டி போட்டு மீன்களையும், நண்டுகளையும் விலைக்கு வாங்குகின்றனர்.

மீன் வரத்து குறைவினாலும், மீன் விலை கடற்கரைப் பகுதியிலேயே அதிகரித்திருப்பதாலும் பொதுமக்கள் மீன் ஏல மையத்துக்கு வருவது கணிசமாக குறைந்துவிட்டது. இதனால் மீன் ஏலம் விடும் நேரத்தில் பரபரப்பாக காணப்படும் வேம்பார் கடல்பகுதி களையிழந்து வெறிச்சோடி இருக்கிறது என்றார் அவர்.

**சீசன் தொடங்கியும் மாம்பழ வரத்துக் குறைவு**

சீசன் தொடங்கிய நிலையிலும் புதுச்சேரிக்கு மாம்பழ வரத்து குறைவாகவே உள்ளது. மாம்பழங்கள் அதிகளவில் விளையும் கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டங்களில் இருந்து புதுச்சேரிக்கு ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் அல்போன்சா, பங்கனப்பள்ளி, நீலம், செந்தூரா, பீத்தர், மல்கோவா உள்பட பல்வேறு மாம்பழ வகைகள் விற்பனைக்கு வரும்.

நடப்பாண்டு சேலம், கிருஷ்ணகிரி பகுதிகளில் பருவ மழை பொய்த்துவிட்டதால் மாம்பழ விளைச்சல் அப்பகுதிகளில் 65 சதவீதம் அளவுக்கு குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் சீசன் தொடங்கிவிட்ட நிலையிலும் புதுச்சேரி பெரிய மார்க்கெட்டுக்கு மாம்பழ வரத்து குறைவாகவே உள்ளது. தற்போது விற்பனைக்கு வந்துள்ள மாம்பழங்களும் தரம் குறைந்தவையாகக் காணப்படுகின்றன. இதனால் கோடைக்காலங்களில் மாம்பழங்களை விரும்பி உண்ணும் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மேலும் ஒரு கிலோ பங்கனப்பள்ளி ரூ.80, சேலம் மாம்பழம் ரூ.70, ஒட்டுமாம்பழம் ரூ.50, மல்கோவா ரூ.40, செந்தூரா ரூ.30-க்கும் விற்கப்படுகிறது. இந்நிலையில், மாம்பழங்களை செயற்கையாக பழுக்கச் செய்ய ரசாயன கல் வைப்பதை தடுக்க, புதுச்சேரி உணவுக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் 3 வகையான கத்திரிக்காய் பற்றி அறியலாம்

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் 3 வகையான கத்திரிக்காய் சாகுபடி செய்து தற்போது அறுவடை நடக்கிறது. விவசாயிகள் நேரில் வந்து சாகுபடி குறித்து அறிந்து பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் கடந்த ஓராண்டு காலமாக வெளிமாநிலத்தில் உள்ள நெல் வகைகள், காய்கனி வகைகள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, இதன் விளைச்சல், லாப முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்படுகிறது. இதன்படி தை மாதத்துக்கு பிறகு பயிரிட்ட பாலூர் -2 மற்றும் வி.ஆர்.எம்.-1, உஜாலா கோல்ட் ஆகிய ரகங்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. மாதூர் பகுதியைச் சுற்றியுள்ள விவசாய ஆர்வலர்களை அழைத்து வேளாண் நிலையத்தார் புதன்கிழமை அறுவடை குறித்து விளக்கம் அளித்தனர். வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஆ. சுரேஷ் கலந்துகொண்டு பேசும்போது, விவசாயிகள் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு வர வேண்டும். நெல் மற்றும் காய்களின் வகைகள் இங்கு எவ்வாறு பயிரிடப்பட்டுள்ளது. தமது விளைநிலப் பகுதியில் இப்பயிரை விளைவிக்க என்ன வகையான ஆலோசனைகள் வேண்டுமோ அதனை பெறலாம். குறிப்பாக, தோட்டப் பயிராக உள்ள கத்திரிக்காய் நல்ல லாபம் தரக்கூடியதாக உள்ளதால், இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார் இப்புதிய ரகங்கள் 150 நாள் பயிராகும். 65 முதல் 70 நாள்களில் பூத்து காய்க்கும் நிலைக்கு வந்துவிடும். பூச்சிகள் அதிகம் தாக்காதவை. பாலூர் -2 ரகம், அதிக காய்ப்புத் தன்மை கொண்டது. வி.ஆர்.எம் -1 ரகம், காய்களின் காம்புகளில் சிறிய முள்கள் இருக்கும். அதிக சுவை மிக்கது. உஜாலா கோல்ட் ரகம், நீண்ட வடிவிலும், கொத்துக் கொத்தாக காய்க்கும் தன்மை கொண்டது. அடர்த்தியாகவும் அதிக விளைச்சல் தரக்கூடியது. நிலையத்தில் இந்த கத்திரிக்காய்களின் விதைகளைப் பெற்று, விவசாயிகள் தங்களது நிலப்பரப்பில் பயிரிட்டு லாபம் பெற வேண்டும் என்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வு**

கூடலூர்: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், கடந்த 2 தினங்களாக மழை பெய்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம், 247 கன அடியாக இருந்தது. நீர்மட்டமும் சற்று உயர்ந்து, நேற்று காலை நிலவரப்படி 109.70 அடியாக இருந்தது. தமிழகப் பகுதிக்கு 100 கன அடி நீர் திறக்கப் பட்டுள்ளது.
நீர் இருப்பு 864 மில்லியன் கன அடி. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால், அணை நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது. பெரியாறில் 1.8 மி.மீ., தேக்கடியில் 0.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

**பழங்களின் விலை உயர்வு**

திருப்புவனம் : கடும் வறட்சி காரணமாக பழங்களின் வரத்து குறைவால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.
திருப்புவனம் வட்டாரத்தில் நாட்டு வாழை அதிகம் விளையும். சமீப காலமாக தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வாழை விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மதுரை போன்ற நகரங்களில் இருந்து வாழைத்தார் மொத்தமாக வாங்கி விற்பனை செய்கின்றனர். நாட்டு வாழைப்பழம்,ரஸ்தாளி, கற்பூர வள்ளி, செவ்வாழை, பச்சை வாழை, மஞ்சள் வாழை, பூவன் உள்ளிட்ட பல்வேறு பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு பழம் 3 ரூபாயில் இருந்து ஐந்து ரூபாயாக உயர்ந்து விட்டது. செவ்வாழை பழம் ஒன்றின் விலை 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரஸ்தாளி 8 ரூபாய் என்றும் , பச்சை வாழை 6 ரூபாய் என்றும், கற்பூரம் 5ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. சீசன் இல்லாத நேரமான சித்திரை மாதமே விலை கடுமையாக உயர்ந்துள்ள போது அடுத்து வைகாசி, ஆனி, ஆவணி மாதங்களில் பழங்களின் விலை இன்னமும் உயர வாய்ப்புள்ளது.

**ஒரு எலுமிச்சை 10 ரூபாய்; தேனியில் விலை உயர்வு**

தேனி: வறட்சி, தேவை அதிகரிப்பால், தேனி மார்க்கெட்டில் ஒரு எலுமிச்சை விலை 10 ரூபாயாக உயர்ந்துள்ளது. பெரிய பழமாக இருந்தால் 15 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மழை பெய்யாமல் வறட்சி தொடர்ந்ததால், தேனி மாவட்டத்தில் எலுமிச்சை விளைச்சல் கடுமையாக வீழ்ச்சி அடைந்தது. அதே நேரத்தில் கடும் வெயில், வறட்சி காரணமாக ஜூஸ் கடைகளில் விற்பனை அதிகரித்து தேவையும் அதிகரித்தது. அதேபோல் கோயில் திருவிழாக்கள் அதிகம் நடந்து வருவதால், எலுமிச்சை பழத்தின் தேவை அதிகரித்துள்ளது. இந்நிலையில், கோவை, திருப்பூர், கிருஷ்ணகிரி உட்பட பல்வேறு வட மாவட்டங்களுக்கு தேனியில் இருந்து எலுமிச்சை விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதனால் தேவை அதிகரித்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே விலை கடுமையாக உயர்ந்துள்ளது. நடுத்தர அளவுள்ள ஒரு பழம் 10 ரூபாய்க்கும், பெரிய அளவு பழம் 15 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**சூறைக்காற்றில் முருங்கை சேதம்**

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி அருகே கொத்தப்பட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, கோத்தலூத்து, கதிர்நரசிங்கபுரம், ராஜதானி, சேவாநிலையம், தெப்பம்பட்டி உட்பட பல பகுதிகளில் முருங்கை சாகுபடி உள்ளது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன், இப்பகுதியில் பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது. சுழன்றடித்த காற்றில் முருங்கை மரங்கள் பல இடங்களில் முறிந்து சேதம் அடைந்தன. மரங்களில் இருந்த பூக்கள் உதிர்ந்து விட்டது. ஏற்கனவே வறட்சியால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு, சூறைக்காற்று மேலும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

**மாங்காய் வரத்து அதிகரிப்பு; மார்க்கெட்டில் விலை வீழ்ச்சி**

ஒட்டன்சத்திரத்தில் : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் மாங்காய் வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ரூ.12 க்கு விற்றது.
திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விளைந்த மாங்காய்கள் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவற்றில் கல்லாமை மற்றும் உ<ருட்டு வகை காய்கள் வரத்து அதிகம். தமிழகம் மற்றும் கேரள வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். ஊறுகாய் போட இவ்வகை மாங்காய்கள் ஏற்றதாக உள்ளதால் விற்பனை

அதிகரித்து உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.30 க்கு மேல் விற்ற மாங்காய்கள், வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. கல்லாமை ரக மாங்காய்கள் கிலோ ரூ.12 க்கும், உருட்டு ரகம் ரூ.8க்கும் விற்பனை செய்யப்பட்டது. வியாபாரி ஒருவர் கூறுகையில், ""வரத்து அதிகரித்திருந்தாலும், தேவையும் இருப்பதால் விலை மேலும் குறைய வாய்ப்பில்லை,'' என்றார்.

**இந்திய மாம்பழத்துக்கு தடை : பிரிட்டன் பார்லியில் விவாதம்**

லண்டன்: இந்திய மாம்பழம் மற்றும் காய்கறிகளுக்கு, ஐரோப்பிய நாடுகள் தடை விதித்துள்ளது குறித்து, பிரிட்டன் பார்லிமென்ட்டில், அடுத்த வாரம் விவாதிக்கப்பட உள்ளது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும், அல்போன்சா மாம்பழம், பாகற்காய், புடலங்காய், தக்காளி, வெள்ளரிக்காய் ஆகியவற்றில், பூச்சி கொல்லி மருந்துகளின் தாக்கம் அதிகமாக உள்ளதாக கூறி, ஐரோப்பிய நாடுகள், இந்த காய், கனிகளுக்கு தடை விதித்துள்ளன. ஐரோப்பிய யூனியனில் உள்ள, 28 நாடுகளில், இம்மாதம், 1ம்தேதியிலிருந்து, அடுத்த ஆண்டு டிசம்பர் வரை, இந்த காய், கனிகளை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஐரோப்பா மற்றும் இந்திய நாடுகளை சேர்ந்த வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இது குறித்து, பிரிட்டன் பார்லிமென்ட்டில் விவாதிக்க, இந்திய வம்சாவளி எம்.பி., கீத் வாஸ், சபாநாயகரிடம் அனுமதி கோரியுள்ளார். இதையடுத்து, வரும், 8ம்தேதி, இது தொடர்பாக, பிரிட்டன் பார்லிமென்டில் விவாதம் நடைபெற உள்ளது.
இந்தியா எச்சரிக்கை: "இந்திய மாம்பழங்கள் மீதான தடையை அகற்றாவிட்டால், உலக வர்த்தக கூட்டமைப்பிடம் புகார் கூறுவோம்' என, மத்திய அரசு எச்சரித்துள்ளது.
இதுகுறித்து மத்திய வர்த்தகத் துறை அமைச்சர், ஆனந்த்சர்மா கூறியதாவது:
இந்தியாவின் உணர்வை புரிந்து கொண்டு, மாம்பழங்கள் மீதான தடையை, ஐரோப்பிய யூனியன் விலக்கிக்கொள்ளும் என, நம்புகிறோம். இல்லாவிட்டால், உலக வர்த்தகக் கூட்டமைப்பிடம் (டபிள்யூ.டி.ஓ.) எடுத்து செல்லு வோம். ஐரோப்பிய யூனியன் வர்த்தக கமிஷனரிடம், இதுகுறித்து ஏற்கனவே தெரியப்படுத்தி உள்ளோம். ஏற்றுமதி செய்யும் காய், கனிகளை ஆய்வு செய்வதற்காகவே, உலக தரத்தில் பரிசோதனை கூடங்களை அமைத்து, அதற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளின் சான்றிதழையும் பெற்றுள்ளோம். தடை தன்னிச்சையானது. இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன், பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**ஊட்டியில் ஆலங்கட்டி மழை**



ஊட்டி: ஊட்டியில் நேற்று 2 மணி நேரம் இடியுடன் கூடிய பெய்த ஆலங்கட்டி மழையால் நகரமே நீரில் மிதந்தது. இதனால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் தத்தளித்தனர். தமிழகத்தின் பல மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு மழை பெய்ய துவங்கியது. சுமார் 2 மணி நேரம் இடியுடன் கூடிய கன மழை பெய்தது. இதில், பெரும்பாலான பகுதிகளில் ஆலங்கட்டி மழையே பெய்தது.

இதனால், ஊட்டி நகரமே நேற்று 'ஐஸ்' கட்டிகளாக காட்சியளித்தன. தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா மற்றும் மரவியல் பூங்காக்களில் உள்ள புல் மைதானங்களில் ஐஸ் கட்டிகள் விழுந்து வெள்ளை கம்பளம் விரித்தார்போல் காட்சியளித்தது.

சுற்றுலா பயணிகள் இந்த ஐஸ் கட்டிகளை எடுத்து ஒருவருக்கு ஒருவர் வீசி விளையாடினர். இந்த மழை காரணமாக உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அவதிக்குள்ளாகினர். நெல்லையில் நேற்று மதியம் ஒரு மணியளவில் பாளைங்கோட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளில் இடி, மின்னலுடன் மழை கொட்டியது. அம்பை, களக்காடு, தென்காசி உள்ளிட்ட மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் ஓரளவுக்கு மழை பெய்தது. இருப்பினும் அணைகளின் நீர்மட்டத்தில் நேற்று பெரிய அளவில் மாற்றமில்லை. நேற்று பெய்த திடீர் மழையால் உளுந்து உள்ளிட்ட மாற்று பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று பகல் 12 மணியளவில் வானம் மேக மூட்டமாக மாறியது. பின்னர் பகல் 2 மணியில் இருந்து பலத்த இடி, மின்னலுடன் மழை கொட்டி தீர்த்தது. நாகர்கோவில், மார்த்தாண்டம், அருமனை, குளச்சல், தக்கலை, குலசேகரம், பூதப்பாண்டி, அருமநல்லூர் உள்ளிட்ட ஒரு சில இடங்களில் இடியுடன்கூடிய மழை பெய்தது. இதனால், அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மின்னல் தாக்கி பெண் பலி சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே சித்தலக்குண்டு கிராமத்தை சேர்ந்தவர் மாரி. இவரது மனைவி விஜயா (36) ஆடுகளை அருகே உள்ள

தரிசு நிலத்திற்கு மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றார். பிற்பகல் 3 மணிக்கு திடீர் என இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யத்தொடங்கியது. இதில், மின்னல் தாக்கி விஜயா உடல் கருகி சம்பவ இடத்திலேயே இறந்தார்.

**பாசுமதி அரிசி ஏற்றுமதியில் சிக்கல்**



மும்பை: பாசுமதி அரிசி ஏற்றுமதியில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அரிசி ஏற்றுமதியாளர்கள் கூறுகையில், 'இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அரிசியில் 70 சதவீத அரிசி பாசுமதி அரிசியாகும். கடந்த 2013-2014ம் நிதியாண்டில் ரூ.28,189 கோடி மதிப்பில் 40 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் சுமார் ரூ.11,488 கோடி மதிப்பில் 15 லட்சம் டன் பாசுமதி அரிசியை ஈரான் நாடு வாங்கிக்கொண்டது.

இந்நிலையில், மரபணு மாற்று தொழில்நுட்பத்தில் பாசுமதி அரிசியை உற்பத்தி செய்யவில்லை உள்ளிட்ட பல்வேறு சான்றுகளை தங்களுக்கு கொடுத்தால் மட்டுமே பாசுமதி அரிசியை இந்தியாவில் இருந்து

வாங்குவோம் என்று ஈரான் அறிவித்துள்ளது. இதன் கார ணமாக நடப்பு 2014-2015ம் ஆண்டில் பாசுமதி அரிசி ஏற்றுமதியில் சரிவு ஏற்படும்' என்றனர்.

## மாம்பழம் இறக்குமதிக்கு தடை

### ஐரோப்பிய கூட்டமைப்புக்கு இந்தியா எச்சரிக்கை




புதுடெல்லி: இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழங்களில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட பூச்சிக்கொல்லி மருந்து அதிக அளவில் இருக்கிறது. எனவே மாம்பழம் இறக்குமதிக்கு தடை விதிப்பதாக ஐரோப்பிய கூட்டமைப்பு அறிவித்தது. இதுகுறித்து மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா நேற்று கூறுகையில், 'உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளுக்கு மாறாக ஐரோப்பிய கூட்டமைப்பு செயல்படுகிறது. மாம்பழத்திற்கு விதிக்கப்பட்ட தடையை விலகிக்கொள்ள வேண்டும்.

இல்லையென்றால் இது குறித்து உலக வர்த்தக அமைப்பில் புகார்

செய்யவோம் என்றும் அந்நாட்டிற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள் பதப்படுத்தல் தொடர்பான பரிசோதனை மையத்தை உலக தரத்திற்கு இணையாக இந்தியா அமைத்துள்ளது. இந்த மையத்தின் சான்றை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளது' என்றார்.

## முட்டை விலை உயர்வு



நாமக்கல்: தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நாமக்கல்லில் நடந்தது. கூட்டத்தில் ஒரு முட்டையின் விலையில் 20 காசுகள் உயர்த்தி முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 280 காசுகளில் இருந்து 300 காசுகளாக உயர்ந்துள்ளது. கடந்த 2 தினங்களுக்கு முன்பு 12 காசுகள் உயர்த்தப்பட்ட நிலையில் தற்போது மேலும் 20 காசுகள் உயர்ந்துள்ளது. கோழித் தீவனம் விலை அதிகரிப்பு, முட்டை உற்பத்தி குறைந்தது உள்ளிட்ட காரணங்களால் விலை உயர்வு ஏற்பட்டதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## கடுகு விலை ஏற்றம்



இந்தூர்: இந்தூர் சந்தையில் நேற்று முன்தினம் கடுகு எண்ணெய் விலையில் சரிவு ஏற்பட்டதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். ரூ.650க்கு விற்ற கடுகு எண்ணெய் (10 கிலோ டின்) விலையில் திடீர் சரிவு ஏற்பட்டு ரூ.642க்கு விற்றது. அதே நேரத்தில் கடுகு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.200 அதிகரித்து ரூ.4,200க்கு விற்பனையானது. கடுகு உற்பத்தி செய்யும் விவசாயிகள் அவற்றை அதிக அளவில் சந்தைக்கு கொண்டுவராததால் தான் இந்த விலை உயர்வு என்று வியாபாரிகள் குறிப்பிட்டனர்.

## 4ம் தேதி முதல் கத்திரி தொடக்கம் கடும் வெயிலால் அனல் காற்று வீசும்

சென்னை, : வரும் 4ம் தேதி கத்திரி வெயில் தொடங்குகிறது. 24ம் தேதிவரை இது நீடிக்கும். வெயிலின் தாக்கத்தால் அனல் காற்று வீசும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கடுமையான வெயில் காரணமாக வறட்சி தலைகாட்டத் தொடங்கியுள்ளது. ஏரி, குளங்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. வெப்ப காற்றும் சேர்ந்து கொண்டது. மரம், செடி,

கொடிகள் எல்லாம் வெயிலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் கருக தொடங்கியுள்ளன. வெயிலில் வெளியில் தலை காட்ட முடியாமல் பொதுமக்கள் வீட்டுக்குள் முடங்கியுள்ளனர்.

சென்னையில், நேற்று அதிகப்பட்சமாக 97 டிகிரி வெயில் அடித்தது. பல இடங்களில் வெப்ப காற்று  வீசியது. பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நேற்று விடுமுறை நாள் என்பதாலும், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை என்பதாலும் சாலைகள் வெறிச்சோடின. கடுமையான வெப்பத்தின் காரணமாக சாலைகளில் கானல் நீர் காணப்படுகிறது. மாலை வேளைகளில் பொதுமக்கள் குடும்பத்துடன் கடற்கரை மற்றும் பூங்காக்களுக்கு செல்கின்றனர்.

தமிழகத்தில் கோடை யில் ஆண்டுதோறும் ஏற்படும் கத்திரி வெயில் எனப்படும் அக்னி வெயில் காலம் வரும் 4ம் தேதி தொடங்கி 24ம் தேதி வரை நீடிக்கும். இடைப்பட்ட நாட்களில் பொதுவாக வறண்ட வானிலை காணப்படும். வானம் தெளிவாக இருக்கும். இதனால், வெயில் நேரடியாக பூமியை தாக்கும். அப்போது கடுமையான வெப்பம் பிரதிபலிக்கும். இதனால் வெப்ப காற்று வீசும்; புழுக்கம் அதிகமாக இருக்கும்.

கடந்த ஆண்டு அதிகபட்சமாக வேலூர், தர்மபுரி, பாளையங்கோட்டை, சேலம் பகுதிகளில் 110 டிகிரி வெயில் கொளுத்தியது. இந்தாண்டு அதைவிட அதிகமாக வெயில் அளவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரி தெரிவித்தார்.

**மீன் வளர்ப்பதற்கான தீவனம், உபகரணங்களை தாமதமின்றி வழங்க வேண்டும்**

வலங்கைமான், :   வலங்கைமான் தாலுகாவில் உள்ள 50 கிராம ஊராட்சிகளில் 200க்கும் மேற்பட்ட பண்ணை குட்டைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் கடந்தாண்டு வெட்டப்பட்டது. கடந்த நிதியாண்டில் வலங்கைமான் தாலுகாவில் மகாத்மா காந்தி தேசிய

ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு இலவசமாக பண்ணை குட்டைகள் அமைத்து தரப்பட்டன. பண்ணை குட்டைகள் அமைப்பதற்கு தேவையான இடத்தை வழங்கும் விவசாயிகளுக்கு அரசு மீன் குஞ்சுகள் மற்றும் மீன் பிடிப்பதற்கான உபகரணங்கள், மீன் வளர்ப்பிற்கான தீவனங்கள் ஆகியவை அரசால் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

இருப்பினும் மிகவும் காலதாமதமான நிலையில் மிக மிக சிறிய அளவிலான மீன் குஞ்சுகளே வழங்கப்பட்டன. அவை போதிய வளர்ச்சியின்றி இருந்தன. அவை போதிய வளர்ச்சி அடைவதற்கான தீவனத்தையும் இதுவரை அரசு வழங்கவில்லை.

எனவே அரசு மேலும் கால தாமதமின்றி வலங்கைமான் பகுதிகளில் பண்ணை குட்டைகள் வெட்டிய பயனாளிகளுக்கு தேவையான மீன் தீவனங்கள் மற்றும் உபகரணங்களை வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மண்வளம் பெருக பசுந்தாள் உர பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு யோசனை**

சேதுபாவாசத்திரம், : மண் வளம் பெருகி மகத்தான மகசூல் பெற பசுந்தாள் உர பயிர் சாகுபடி செய்யலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

மகத்தான மகசூல் பெற வேண்டுமானால் அதிகளவு இயற்கை உரங்களை மண் ணில் இடவேண்டும். இதில் முக்கிய பங்கு வகிப்பது பசுந்தாள் உரங்கள் மற்றும் பசுந்தழை உரங்களாகும். பசுந்தாள் உரத்தில் தக்கை பூண்டு, சணப்பு, கொளிஞ்சி, அகத்தி, சீமை அகத்தி, பிள்ளி பயிர் ஆகியவை

சிறந்தவையாகும். பசுந்தாள் உர பயிர்களால் பயிர்வகை இனத்தை சேர்ந்த பசுந்தாள் உரப்பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து 70 சதவீதம் வரை வேர் முடிச்சுகளில் நிலை நிறுத்தி அதில் ஒரு பகுதியை மண்ணில் சேர்ப்பதால் நிலம் வளமடைகிறது. ஒரு ஏக்கரில் 25- 45 கிலோ வரை தழைச்சத்தை மண்ணுக்கு கொடுக்கிறது, மண் அமைப்பை சீராக்குகிறது, மண் அரிப்பை தடுத்து மேல் மண் இழப்பை தடுக்கிறது.

மண்ணுக்கு வளம் சேர்ப்பது மட்டுமில்லாமல் பிடிப்பு பயிராகவும், நிழற்பயிராகவும், மூடுபயிராகவும், தீவன பயிராகவும் பயன்படுகிறது. மண்ணின் கரிம பொருட்களை (ஆர்கானிக் மேட்டர்) அதிகரிக்க செய்கிறது. பசுந்தாள் எருவானது பயிரின் பேரூட்ட சத்தான தழைச்சத்து மண்ணிலிருந்து நீர் மூலம் விரையமாவதை தடுத்து நிறுத்த உதவுகிறது. நுண்ணூட்ட சத்துக்களை உறிஞ்சி தன்னுடன் வைத்து கொண்டு பிறகு மண்ணில் உள்ள பயிருக்கு தேவைப்படும்போது எளிதில் கிடைக்க செய்கிறது.

கீழ்படைகளில் உள்ள (சப்சாயில்) சத்துக்களை கிரகித்து அதை மேல்படைகளில் (சர்பேஸ்சாயில்) சேர்க்கிறது. பசுந்தாள் உர பயிர்கள் நிலத்தில் சேரும் போது அங்குள்ள நுண்ணு யிர்கள் விரைவாக பெருகி அவற்றின் செயல்திறன் ஊக்குவிக்கப்படுகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் பசுந்தாள் உரப்பயிர்களை பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழுது மண்வளம் பெருகி உள்ள நிலத்தில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம்.

**காரைக்கால் வேளாண் பண்ணையில் கத்தரி சாகுபடி விளக்க பயிற்சி**

காரைக்கால், : காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் பண்ணையில், விவசாயிகளுக்கு கத்தரி சாகுபடி குறித்த நேரடி விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

காரைக்காலை அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் பண்ணையில், காய்கறி, கீரை மற்றும் மீன், கோழி, முயல் உள்ளிட்டவை வளர்க்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது இது குறித்த சிறப்பு பயிற்சியும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பண்ணையில் சோதனை முறையில் பயிரிடப்பட்ட கத்தரி வகைகளை, நிலையத்தின் தலைவர் சுரேஷ் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அங்கு வந்த விவசாயிகளுக்கு கத்தரியின் வகைகள், பயிர் செய்யும் முறை குறித்து விளக்கம் அளித்தார்.

நிலைய தலைவர் சுரேஷ் கூறும்போது, இந்த வகை கத்தரிகள் அதிக விளைச்சல் தரக்கூடியவை. இதன் வயது 150 நாட்கள். 65 முதல் 70 நாளில் பூத்து காய்க்கும் தன்மை கொண்டது.

பூச்சிகள் அதிக அளவில் தாக்காத வகைகள். இதில் பாலூர்-2 முதல் ரகமாகும். இது நீண்ட காம்பு கொண்டதாகவும், தரமானதாகவும் இருக்கும். 2ம் ரகமான வி.ஆர்.எம்.-1. இந்த காய்களின் காம்புகளில் சிறிய அளவிலான முட்கள் இருக்கும். ஆனால், அதிக சுவையுடையது. 3ம் ரகமானது உஜாலா கோல்ட். நீண்ட வடிவிலும் கொத்துக்கொத்தாய் காய்க்கும். தற்போது பண்ணையில் ஒரு மா அளவிற்கு பயிரிடப்பட்டுள்ளது. ஒரு மா அளவில், 1500 முதல் 2000 கிலோ வரை கத்தரிக்கய் கிடைக்கும்.

அனைத்து பருவத்திலும் பயிரிட்டு லாபம் அடையலாம். விரைவில் அனைத்து விவசாயிகளையும் அழைத்து சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தவுள்ளோம், என்றார்.

**பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு உயிர் தண்ணீர் திறப்பு**

கோபி, : பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு உயிர் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்தில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் உள்ளது.இந்த விவசாய நிலங்களுக்கு ஆண்டுதோறும் இரு போக சாகுபடிக்கு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் விடப்படுவது வழக்கம்.அதில் முதல் போக சாகுபடிக்கு ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் 25ம் தேதி தண்ணீர் வழங்கப்படும். கடந்த சில ஆண்டுகளாக போதிய அளவு பருவமழை பெய்யாததாலும், காவிரி நதிநீர் ஆணைய இறுதி தீர்ப்பினாலும் கடந்த சில ஆண்டுகளாக ஒரு போக சாகுபடியே கேள்விக்குறியானது. இந்நிலையில், கடந்த ஆண்டு பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஏற்கனவே உள்ள முறைப்படி தண்ணீர் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் போராட்டம் நடத்தியதை தொடர்ந்து தண்ணீர் வழங்கப்பட்டது.இந்த ஆண்டும் தண்ணீர் இருப்பு குறைவாக உள்ளதாக கூறி முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை. அதனால் விவசாயிகள் தேர்தல் புறக்கணிப்பு உள்ளிட்ட போராட்டங்களை அறிவித்தனர்.

அதை தொடர்ந்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திய அதிகாரிகள் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தனர். அதனடிப்படையில் நேற்று முன்தினம் பவானிசாகர் அணையில் இருந்த தடப்பள்ளி மற்றும் அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 700 கன அடியும், குடிநீருக்கு 200 கன அடியும் சேர்த்து 900 கன அடி வழங்கப்பட்டு வருகிறது. 25 நாட்களுக்கு மட்டும் உயிர் தண்ணீராக வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: தமிழகத்தில் காவிரி டெல்டா பாசனத்திற்கு அடுத்து ஈரோடு மாவட்ட விவசாயிகள் தான், ஆண்டு தோறும் இரு போக சாகுபடியில் அதிகளவில் நெல் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் வரை முறையாக தண்ணீர்வழங்கப்பட்ட நிலையில் உயர்ரக அரிசி விலை கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.30 வரை மட்டுமே இருந்தது.ஆனால், இன்று நெல் உற்பத்தி கணிசாக குறைந்ததை தொடர்ந்து தற்போது ஒரு கிலோ அரிசி ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனையாகிறது. அதனால் அரசு நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து தண்ணீர் வழங்க வேண்டும்.

இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு



ஆனைமலை,

ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**ஆழியாறு அணை**

பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி.) முக்கிய அணையாக ஆழியாறு அணை விளங்கி வருகிறது. 120 அடி கொள்ளளவு கொண்ட ஆழியாறு அணையில் சேமிக் கப்படும் தண்ணீர் மூலம் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகள் பயன்பெறுவதுடன், லட்சக் கணக்கான மக்களின் குடிநீர் தேவையும் பூர்த்தியாகிறது. மேலும் கேரளாவுக்கும் தண் ணீர் திறந்து விடப்படுகிறது.

பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆண்டுக்கு 10½ மாதங்கள் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அதே போல் புதிய ஆயக்கட்டு பாசனத்தில் சுமார் 44 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களுக்கு ஒருமடை விட்டு ஒரு மடை என்ற பாசன முறையில் தண்ணீர் ஆழியாறு அணை யில் இருந்து திறந்து விடப்படு கிறது.

**தண்ணீர் திறப்பு**

கடந்த அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை புதிய ஆயக்கட்டு பாசனத் தில் உள்ள ஒரு மண்டல பகுதிக்கு தண்ணீர் வழங்கப் பட்டது. இந்த நிலையில் புதிய ஆயக்கட்டு பாசனப்பகுதியில் உள்ள தென்னை, வாழை, கரும்பு உள்பட பயிர்கள் கடும்

வறட்சியினால் தண்ணீர் இன்றி வாடி வந்தன. இதனால் உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து தமிழக அரசு புதிய ஆயக்கட்டு பாசனத்துக் குட்பட்ட 22 ஆயிரத்து 116 ஏக் கர் பாசன நிலங்களுக்கு உயிர் தண்ணீர் திறந்து விட அர சாணை வெளியிட்டது. தொடர்ந்து பொதுப்பணித் துறையினர் நேற்று ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட்டனர்.

இது குறித்து பொதுப்பணித் துறையினர் கூறியதாவது:–

<u>11 நாட்கள்</u>

புதிய ஆயக்கட்டு பாசனத் துக்கு ஆழியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. இதில் பொள் ளாச்சி கால்வாய் மூலம் ‘ஏ’ மண்டலத்தில் 11 ஆயிரத்து 616 ஏக்கரும், வேட்டைக்காரன் புதூர் கால்வாயில் ‘பி’ மண் டலத்தில் 5 ஆயிரத்து 623 ஏக்கரும், சேத்துமடை கால் வாயில் ‘ஏ’ மண்டலத்தில் 2 ஆயிரத்து 515 ஏக்கரும், ஆழி யாறு பீடர் கால்வாயில் 2 ஆயிரத்து 362 ஏக்கரும் பயன் பெறும் வகையில் 11 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறந்து விடப்படும்.

இதற்காக 4 கால்வாய்கள் மூலம் 400 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் கடந்து ஆண்டு தண் ணீர் கிடைக்காத பாசன நிலங் களில் உள்ள கிணறுகளுக்கு தண்ணீர் கிடைப்பதுடன், நிலத்தடி நீர் மட்டமும் உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**குமரி மாவட்டத்தில் தொடர் மழை மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1¼ அடி உயர்வு**



நாகர்கோவில்

குமரி மாவட்டத்தில் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1¼ அடி உயர்ந்துள்ளது.

<u>அக்னி நட்சத்திர வெயில்</u>

கோடை வெயிலின் உச்சகட்டமான கத்திரி வெயில் என்று சொல்லக்கூடிய அக்னி நட்சத்திர வெயில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) தொடங்க உள்ளது. ஆனால் குமரி மாவட்ட மக்கள் கடந்த மாதம் அக்னி நட்சத்திர வெயிலின் உக்கிரத்தை முன்கூட்டியே பெற்றது போன்ற உணர்வில் இருந்து வந்தனர். அந்த அளவுக்கு கடந்த சில மாதங்களாகவே வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் கடந்த சில நாட்களாக கோடை வெயிலின் வெப்பத்தை தணிக்கும் வகையில் மழை பெய்ய தொடங்கியது. தினமும் மதியம் வரை வெயிலும், பின்னர் மழை தூறுவதுமாக உள்ளது. இதனால் குமரி மாவட்டத்தில் குளிர்ந்த சீதோஷ்ண நிலை காணப்படுகிறது.

<u>இடி–மின்னலுடன் மழை</u>

இந்தநிலையில் நேற்று காலையில் நாகர்கோவிலில் லேசான வெயில் இருந்தது. மதியம் 1.30 மணி அளவில் வானம் கருமேகமாக காட்சி அளித்தது. பின்னர் இடி– மின்னலுடன் பலத்த மழை பெய்யத்தொடங்கியது. தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. இதுபோல் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை பொதுமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:–

<u>அணை நீர்மட்டம் உயர்வு</u>

பேச்சிப்பாறை– 1.4, பெருஞ்சாணி– 15.4, மாம்பழத்துறையாறு– 71, முக்கடல்– 28, குளச்சல்– 3.2, ஆணைக்கிடங்கு– 70, கோழிப்போர்விளை– 43, முள்ளங்கினாவிளை– 3, நாகர்கோவில்– 8.8, சுருளோடு– 5, ஆரல்வாய்மொழி– 2.6, மயிலாடி– 2.2 என்ற அளவில் மழை பதிவாகியிருந்தது. இதனால் அணைகளுக்கும் நீர்வரத்து கணிசமாக இருந்து வருகிறது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 144 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 36 கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 11 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

இந்த மழையின் காரணமாக அணைகளின் நீர்மட்டமும் படிப்படியாக உயர்ந்து வருகிறது. 15.85 அடியாக இருந்த பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 16 அடியாகவும், 37.25 அடியாக இருந்த பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் நேற்று 37.30 அடியாகவும், 41.17 அடியாக இருந்த மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் நேற்று 42.32 அடியாகவும் உயர்ந்திருந்தது. ஒரே நாளில் மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 1.15 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த மழையின் காரணமாக குமரி குற்றாலம் என்றழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் தண்ணீர் கொட்டுகிறது. சுற்றுலாப்பயணிகள் திற்பரப்பு அருவியில் ஆனந்தமாக குளித்து வருகின்றனர்.

கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி 4,500 கோடி டாலராக உயர்வு



கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி 4,500 கோடி டாலராக உயர்ந்துள்ளது. 2011–12–ஆம் நிதி ஆண்டில் 2,500 கோடி டாலர் அளவிற்கே வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதியாகி இருந்தன.

விவசாயிகளின் ஒட்டுமொத்த முயற்சிகள், அரசின் கொள்கைகள் மற்றும் வர்த்தக பிரிவினரின் ஆர்வம் போன்ற காரணங்களால் சென்ற நிதி ஆண்டில் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. விவசாயிகளின் மொத்த லாப வரம்பு உற்பத்தி செலவினத்தில் 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. முக்கிய வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்த பட்ச ஆதாய விலையை மத்திய அரசு அதிகரித்து வந்ததே இதற்கு காரணம் என விவசாய செலவினம் மற்றும் விலை அமைப்பு தெரிவித்துள்ளது. ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் இவர்களின் வருவாய் அதிகரித்துள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் மழை: வானிலை ஆய்வு மையம்



வங்கக் கடலில் உருவாகியிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மன்னார் வளைகுடாவிலிருந்து கிழக்கு திசையில் 90 கி.மீ. தூரத்தில் இலங்கை கரையை கடந்தது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதாவது: நாகப்பட்டினத்திலிருந்து 290 கி.மீ. தூரத்தில் நிலைக் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் திங்கள்கிழமை காலை 11 மணியளவில் கரையை கடந்தது. இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு தென் மேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக வலுவிழக்கும்.

இதனால் அடுத்த 24 மணி நேரத்தில் தென் தமிழ கத்திலும் வட தமிழகத்தின் டெல்டா மாவட்டங் களிலும் ஆங்காங்கே கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் மிதமானது முதல் கனமானது வரை மழை எதிர்பார்க்கலாம்.

கடலோரப் பகுதிகளில் வடக்கு மற்றும் வடகிழக்கு திசையில் 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

## இந்திய மாம்பழ இறக்குமதிக்குத் தடை பிரிட்டன் நாடாளுமன்றத்தில் விவாதம்

இந்தியாவிலிருந்து மாம்பழங்கள் இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய யூனியன் தடை விதித்திருப்பது குறித்து விவாதிக்க பிரிட்டன் நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த இந்திய வம்சாவளி எம்.பி. கீத் வாஸ் கூறியதாவது: அல்போன்சா வகை மாம்பழங் களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரிட்டனில் உள்ள வர்த்தகர்களுக்கு கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள் ளது. மேலும், இந்தத் தடை காரணமாக இந்தியா பிரிட்டன் இடையிலான உறவும் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தத் தடை குறித்து நாடாளு மன்றத்தில் விவாதிக்கவேண்டும் என கோரிக்கை வைத்திருந்தேன். இதை ஏற்றுக் கொண்ட பிரிட்டன் நாடாளுமன்ற சபாநாயகர் வரும் 8-ம் தேதி விவாதம் நடத்த அனுமதி அளித்துள்ளார். தடை அமலுக்கு வந்துள்ள முதல்நிலையிலேயே இதுகுறித்து விவாதிக்க அனுமதி அளித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்" என்றார். இந்திய மாம்பழங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் இருப்பதால், கடந்த மே 1-ம் தேதி முதல் 2015-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இறக்குமதிக்கு தற்காலிக தடை விதித்து பிரஸ்ஸல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

பிரிட்டனின் வருடாந்திர மாம்பழ சந்தை மதிப்பு ரூ.693 கோடி. இதில், இந்தியாவிலிருந்து மட்டும் ரூ.64 கோடி மதிப்பிலான மாம்பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.